தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்
11/22, மாங்காடுசாமி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034
தொலைபேசி எண். 044–28221233, தொலைநகல். 044–28253021

TACTV

---

**உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு (PLC)**

**முக்கிய அறிவிப்பு**

குறைந்த கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் என **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஏற்கனவே 13.01.2014 அன்று வெளியிட்ட செய்தித்தாள் விளம்பரத்தின்படி, **01.03.2014 முதல்** மாதாந்திர கட்டணத்தொகையினை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு நேரடியாக **ஆன்லைன் (Net Banking) முறையிலோ அல்லது டெபிட் கார்டு மற்றும் கிரெடிட் கார்டு போன்ற முறையிலோ** மூலம் மட்டுமே செலுத்த முடியும் எனவும் **சலான் மூலம் கட்டணம் செலுத்த இயலாது** எனவும் அறிவித்து இருந்தது.

இதன்படி, இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள **அனைத்து** உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களும் (PLC), **01.03.2014 முதல் ஆன்லைன் (Net Banking) முறையிலோ அல்லது டெபிட் கார்டு (Debit Card) மற்றும் கிரெடிட் கார்டு (Credit Card) போன்ற முறையில் மட்டுமே மாதாந்திர கட்டணத்தினை செலுத்துமாறு மீண்டும் நினைவூட்டப்படுகிறார்கள்.**

மேலாண்மை இயக்குநர்